மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல.03/2010

எனது இல.NP/07/10/03/05
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
திருகோணமலை.
22.02.2010

## வடக்கு மாகாண சேவையின் இலங்கை தொழில் நுட்ப சேவை உத்தியோகத்தர் (படவரைஞர்) உத்தியோகத்தர்களுக்கான Iஆம், IIஆம், திணைக்கள எழுத்து, செயல்முறை பரீட்சை – 2010

மேற்படி பரீட்சை 2010 மார்ச்சு மாதம் 13ம் திகதிமுதல் நடாத்துவதற்கு நடவடிக்கை எம்மால் மேற்கொள்ளப்படுகிறது.

02. தொழில்நுட்ப சேவை பிரமாணக்குறிப்பின் பிரகாரம் இலங்கை தொழில்நுட்ப சேவையின் (படவரைஞர்) உத்தியோகத்தர்களை இலங்கை தொழில்நுட்ப சேவை வகுப்பு II 'அ' பிரிவிற்கு உயர்த்துவதற்கும், இலங்கை தொழில்நுட்ப சேவை வகுப்பு Iற்கு பதவியுயர்த்துவதற்குமான Iஆம், IIஆம் திணைக்களப் பரீட்சைக்கு செயலாளர், வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

03. பரீட்சை : இப்பரீட்சை Iஆம், IIஆம் திணைக்களப் பரீட்சைகள் என 02 பரீட்சைகள் நடாத்தப்படும் கீழ்குறிப்பிடும் தரங்களுக்கான பதவியுயர்த்துவதற்கான தெரிவு இப்பரீட்சை பெறுபேறுகள் அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

3.1. Iஆம் திணைக்களப் பரீட்சை இலங்கை தொழில்நுட்ப சேவை (படவரைஞர்) வகுப்பு II 'ஆ' விலிருந்து வகுப்பு II 'அ' க்கான பதவியுயர்வு

3.2. IIஆம் திணைக்களப் பரீட்சை இலங்கை தொழில்நுட்ப சேவை (படவரைஞர்) வகுப்பு II 'அ' விலிருந்து வகுப்பு I க்கான பதவியுயர்வு

**குறிப்பு:-** இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி ஒரு தடவையில் ஒரு தரத்திற்குரிய பரீட்சைக்கு மட்டும் தோற்றமுடியும்.

இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

04. **தகைமை :**
இப்பரீட்சைக்கு தோற்றும் சகல விண்ணப்பதாரர்களும்,

(அ) வடக்கு மாகாண சேவையில் நிரந்தர சேவை உடையவராயிருத்தல் வேண்டும்.
(ஆ) இப்பரீட்சை தோற்றும் விண்ணப்பதாரி ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைய குறிப்பிட்டுள்ள தகைமைகளை பூர்த்திசெய்துள்ளார் என திணைக்கள தலைவர் திருப்தியடைதல் வேண்டும்.

**05. பாடத்திட்டம்** :

இணைக்கப்பட்டுள்ளது.

06. **விண்ணப்பங்கள் :-**
இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவங்களுக்கமைவாக A4 அளவிலான (21செ.மீ x 29செ.மீ) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் 26.02.2010ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் வரோதய நகர், திருகோணமலை என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

07. **பரீட்சைக் கட்டணம் :**

07.1. முதன்முறையாக இப்பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்கட்டணம் ஏதுவும் செலுத்தவேண்டியதில்லை. ஆயினும் இரண்டாவது முறையாக அல்லது அதற்கு மேலாக பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரிகள் கிழ்குறிப்பிடப்படும் பரீட்சைக்கட்டணம் செலுத்தவேண்டும்

ஒரு பாடம் மட்டும் ரூபா 75.00
இரண்டு பாடங்களுக்கு ரூபா 125.00
மூன்று பாடங்களுக்கு ரூபா 175.00
நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களுக்கு ரூபா 200.00
செயல்முறைப்பரீட்சை ரூபா 225.00

செயல்முறைக்கான பரீட்சைக்கட்டணம் செய்ல்முறைப்பரீட்சைக்கு தோற்றும் போது செலுத்த வேண்டும்.

7.2. பரீட்சைக் கட்டணம் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில், வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளா் அவா்களின் 3003 என்ற வைப்பு கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் கடமையாற்றும் வடக்கு மாகாணசபை உத்தியோகத்தர்கள் மட்டும் பரீட்சைக் கட்டணத்தை, செயலாளா் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் என்ற பெயருக்கு திருகோணமலை தபாலகத்தில் மாற்றக்கூடியவாறு காசுக்கட்டளையாக பெற்று அனுப்பிவைத்தல் வேண்டும்.

08. **மொழிமூலம் :-** இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி ஒருவர் சகல பாடங்களிலும் ஒரே மொழியிலேயே தோற்ற வேண்டும். எக்காரணம் கொண்டும் மொழிமூலம் மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

09. பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு:-

| நகரம் | நகர எண் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 1 |
| மன்னாா் | 2 |
| வவுனியா | 3 |
| கிளிநொச்சி | 4 |
| யாழ்ப்பாணம் | 5 |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்

10. இவ்வறிவித்தலை தங்களது அமைச்சு / திணைக்களத்தில் கடமையாற்றும் இலங்கை தொழில்நுட்ப சேவை (படவரைஞா்) உத்தியோகத்தா்களின் கவனத்திற்கும் கொண்டு வரவும்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடா்பில் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதித்தீா்மானம் மேற்கொள்ளப்படும்.

சி.திருவாகரன்
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
திருகோணமலை.